உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை:- 08/2018

எனது இலக்கம் HAF/1/8/7
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07.

2018.09.11

சகல மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள் ,
பதிவாளர் நாயகம் ,

**<u>செயற்றிறன் அறிக்கையைத் தயாரித்தல்</u>**

பதவி நிலை அலுவலர்கள் யாவரும் வருடாந்தம் சமர்ப்பிக்கும் செயற்றிறன் அறிக்கையினைத் தயாரிக்கும்போது சகல துறைகளும் உள்ளடக்கப்படும் வகையில் தங்களது பங்களிப்பை முன் வைக்கப்படுவதுடன் அப்பங்களிப்பை சரியாக அளவீடு செய்யக்கூடிய சுட்டிகளையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

1. கொள்கை வகுத்தல்
2. நிதி முகாமைத்துவம்
3. மனிதவள முகாமைத்துவம்
4. கருத்திட்ட முகாமைத்துவம்
5. மக்கள் தொடர்பாடலை மேம்படுத்துதல்
6. வள உபயோகம்,
7. வேறு துறைகள்.

02. அச்சுட்டிகளின் கீழ் தான் எட்டியுள்ள இலக்குகள் அல்லது பெறுபேறுகளை அளவீடு செய்து செயற்றிறன் அறிக்கையின் இறுதி மதிப்பீட்டில் குறிப்பிட வேண்டியதுடன் செயற்றிறன் அறிக்கையின் மூலம் தத்தமது பதவிகளின் பொறுப்புகளும் தீர்மானிக்கப்படும்.

03.செயற்றிறன் அறிக்கையின் நடு மற்றும் இறுதித் தவணை மதிப்பீடுகள், தர மதிப்பீட்டிற்காகச் சமர்ப்பிக்கப்படும் போது அலுவலர்களின் தனிப்பட்ட விபரங்கள் அடங்கிய பகுதி மற்றும் அனுமதிக்கப்பட்ட செயற்றிறன் இறுதி மதிப்பீடும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதேபோன்று செயற்றிறன் அறிக்கையில் உள்ளடக்கப்படாத ஆனால் அவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட மேலதிக பணிகள் நிறைவடைந்திருப்பின் அவற்றையும் குறிப்பட வேண்டும், இதனால் அக்கடமைகள் “நேரடியாக சராசரி மட்டத்திற்கு மேல் அடைந்து கொள்ள ஏதுவாகும்“. அவ்வாறு செயல்பட்டால் மாத்திரமே” செயல் திறன் சராசரியாக” உள்ளதா எனும் தீர்மானத்திற்கு வரமுடியும்.

4. இதன்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் கடமை புரியும் சகல பதவி நிலை அலுவலர்களும் செயல் திறன் அறிக்கையினைத் தயாரிக்கும் போது மேற் கூறிய அறிவுரைகளின்படி நடவடிக்கை எடுப்பதுடன் இது தொடர்பாக உங்களின் கீழ் கடமை புரியும் சகல பதவி நிலை உத்தியோகத்தர்களையும் அறிவுறுத்தும்படியும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

எஸ்.டீ.கொடிகார
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.